சாலையை ஆரம்பிக்க முடியுமா என்று கேட்டதற்கு, முடியாது என்று கூறினார்கள். தனியாரும் அந்த அளவுக்கு முன் வருவதற்குத் தயாராக இல்லை. ஆகவே, சர்க்காரே இந்தச் சிறிய சிமெண்டுத் தொழிற்சாலையை அந்த இடத்தில் ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வசதிகள் எங்கு இருக்கின்றன என்று ஆராய்ந்து பார்த்து முடிவுகள் எடுக்கப்படும். எந்த ஊரில் ஆரம்பிக்கப்படும் என்று இப்பொழுது சொல்வதற்கில்லை.

புயலினால் இறந்த மீனவர்கள்

* 94 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் கடலில் 1963 டிசம்பரில் வீசிய பெரும் புயலின் காரணமாக, மீன் பிடிக்கச் சென்ற சிலருக்கு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதா?

(இ) ஆமென்றால், எத்தனை பேர்?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) நான்கு பேர்.

திரு. கரு. சீமைச்சாமி : இப்படி உயிர் இழந்த குடும்பங்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா? அப்படியென்றால், விவரங்கள் என்ன?

கனம் திரு. கோ. பூவராகன் : அது சம்பந்தமாக தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : இப்பொழுது புயல் உருவாகிறது என்பதை 2, 3 நாட்களுக்கு முன்பாகவே கண்டுபிடித்து விடுகிறார்கள். இப்படி இருக்கிற சமயத்தில் புயல் உருவாகும் என்று தெரிந்தால், மீனவர்களுக்கு ஏதாவது எச்சரிக்கை கொடுப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன் : மீனவர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்குமே புயல் உருவாகி வருகிறது என்ற செய்தி அறிவிக்கப்படுகிறது. மீனவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அந்தந்த வட்டார அதிகாரிகள் சொல்லுகிறார்கள்.

Municipal Bus Stand, Coimbatore.

* 95 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) when the plans and estimates for the construction of a Central Bus Stand for Coimbatore Municipality were received by the Government for sanction; and

(*b*) the reasons for the delay in according the sanction?